தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு நெல் ஆராய்ச்சிநிலையம் - ஆடுதுறை

**தஞ்சாவூர்** மாவட்டவானிலைசார்ந்தவேளாண் அறிக்கை

(22.07.2023 முதல் 26.07.2023)

---

**அறிக்கைஎண்: 58/2023** **தேதி: 21.07.2023**

**தஞ்சாவூர் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை**

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 36 - 37 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 27 °செ ஆகவும் பதிவானது.

**தஞ்சாவூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (22.07.2023 முதல் 26.07.2023).**

| கடந்தவாரவானிலை (18.07.2023 முதல் 20.07.2023) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (22.07.2023 முதல் 26.07.2023) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 18/07 | நாள்-2 19/07 | நாள்-3 20/07 | தேதி | நாள்-1 22/07 | நாள்-2 23/07 | நாள்-3 24/07 | நாள்-4 25/07 | நாள்-5 26/07 |
| 0 | 0 | 0 | மழை (மி.மீ.) | 0 | 0 | 2 | 4 | 3 |
| 37 | 36 | 37 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 38 | 37 | 36 | 34 | 34 |
| 27 | 27 | 27 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 28 | 28 | 27 | 25 | 25 |
| 5 | 5 | 5 | மேகமூட்டம் (ஆக்டா) | 4 | 4 | 6 | 6 | 4 |
| 74-57 | 69-61 | 71-57 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 65-60 | 65-60 | 75-60 | 75-60 | 65-60 |
| 4 | 6 | 6 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 10 | 10 | 10 | 10 | 10 |
| மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | காற்றின் திசை | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு வட மேற்கு | மேற்கு |

**தஞ்சாவூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். 24.07.2023 முதல் 26.07.2023 ஆகிய தினங்களில் லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 34 – 38 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25 - 28 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 75 - 60 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 60 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 10 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது | | காற்றினால் ஏற்ப்படக் கூடிய ஈரப்பத இழப்பினைக் குறைக்க, நீா் பாசனத்தினை அதிக அளவில் பாய்ச்சவும் |
| நெல் | நடவு வயல் | தற்போது நிலவக்கூடிய வானிலையின் காரணமாக குருத்துப்பூச்சிகளை கட்டுப்படுத்த இனக் கவர்ச்சிப்பொறிகளை ஏக்கருக்கு 4 என்ற அளவில் வைத்து தாய் அந்துப் பூச்சிகளை கவா்ந்து அழிக்கலாம். மேலும் இதனைக் கட்டுப்படுத்த புரோபனோபாஸ் மருந்தினை ஏக்கருக்கு 400 மில்லி (அ) கார்டிராப் ஹைட்ரோகுளோரைடு குருணைகளை ஏக்கருக்க் 6 கிலோ வீதம் சம அளவு மணலுடன் கலந்தும் இடலாம். |
| தென்னை | | தற்போது நிலவக்கூடிய வானிலையின் காரணமாக தென்னையில் குரும்பை கொட்டுதலை தவிா்ப்பதற்க்கு ஒரு மரத்திற்க்கு 200 மி.லி தென்னை டானிக்கை வேர் மூலம் கொடுக்க வேண்டும் |
| கால்நடைகளுக்கு | மாடு | தற்போது நிலவக்கூடிய வானிலையின் காரணமாக கால்நடைகள் மற்றும் கறவை மாடுகளுக்கு கோமாரி நோய் வருவதற்க்கு வாய்ப்புள்ளது எனவே கால்நடைகளுக்கு கோமாரி நோய்க்கான தடுப்பூசி போடவும். |

## குறுஞ்செய்தி

காற்றினால் ஏற்ப்படக் கூடிய ஈரப்பத இழப்பினைக் குறைக்க, நீா் பாசனத்தினை அதிக அளவில் பாய்ச்சவும்

.

**இயக்குநர்**